**செய்தி வெளியீடு எண்: 80/2022** **நாள்: 16.08.2022**

**நாட்டுப்புற கலைகளை**
**இளைஞர்கள் நாடு முழுவதும் கொண்டு செல்ல வேண்டும்**
**சென்னை மெட்ரோ இரயில் திட்ட இயக்குநர் த.அர்ச்சுனன் வேண்டுகோள்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக அசோக் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டை முன்னிட்டு (Azadi ka Amrit Mahostav and Har Ghar Tiranga) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம் மூலம் பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த கலை நிகழ்ச்சிகளை அசோக் நகர் பகுதியை சேர்ந்த பொதுமக்கள், மெட்ரோ பயணிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் என ஏராளமான கண்டுகளித்தனர்.

மதுரை கலைமாமணி தி.சோமசுந்தரம் குழுவை சார்ந்த 20 பேர் கொண்ட நாட்டுப்புற கலைஞர்கள் பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதில் கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், மற்றும் நையாண்டி மேளம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற சென்னை மெட்ரோ இரயில் இயக்குநர் த. அர்ச்சுனன் (திட்டங்கள்), தெரிவித்ததாவது:-

நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளை நகர்ப்புற மக்களும் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய இளைஞர் சமூதாயத்தின் மூலம் வருங்கால சந்ததியினர் நாட்டுப்புற கலைகளை அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்புற கிராமியக் கலைஞர்கள் தங்களது தனித்துவம் வாய்ந்த பல்வேறு திறமைகளை இந்நிகழ்ச்சி மூலம் மக்களுக்கு தெரிவித்து வருகிறார்கள். இதன் மூலம் கிராமியக் கலை மேலும் வளர்ச்சிப் பெற உறுதுணையாக இருக்கும். இந்நிகழ்ச்சியை கண்டுகளிக்கும் இன்றைய இளைஞர்கள் வருங்கால சந்ததியினர் நாட்டுப்புற கலைகளை பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். நாட்டுப்புற கலைகள் பற்றி தெரிந்து கொண்டால் அதனை கற்றுக்கொள்ள ஆர்வம் வரும். இயல், இசை, நாடகம் பற்றி கற்றுக்கொள்ள பள்ளி, கல்லூரிகளும் உள்ளன. நாட்டுப்புற கலைகளை இன்றைய இளைஞர்கள் கற்க வேண்டும் அதனை வளர்க்க வேண்டும் அதோடு மட்டுமல்லாமல் மேல் நாடுகளுக்கும் சென்று இக்கலையினை வளர்க்க வேண்டும். இந்நிகழ்ச்சியை நடத்திய கலைஞர்கள் பணி புரிபவர்களாகவும், பட்டதாரிகளாகவும் இருக்கிறார்கள். இவர்கள் மேல் நாடுகளுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். இவர்களை பாராட்டி கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

முன்னதாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தி பீட் கொயர் குழுவுடன் இணைந்து பாரம்பரிய இசை கலை நிகழ்ச்சிகள் அசோக் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்றது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**